செய்தி வெளியீடு எண் :38 நாள் :30.12.2020

**தேனி மாவட்டம்**
**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள்**
**தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு**
**ரூபாய் 2,500/- ரொக்கத்துடன் பொங்கல் பரிசு தொகுப்பு மற்றும்**
**விலையில்லா வேட்டி, சேலைகளை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கி தொடங்கி வைத்தார்:-**
*******

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (30.12.2020) கூட்டுறவுத்துறையின் சார்பில் நடைபெற்ற அரசு விழாவில், வருகின்ற தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு ரூபாய் 2,500/- ரொக்கத்துடன் பொங்கல் பரிசு தொகுப்பு மற்றும் விலையில்லா வேட்டி, சேலைகளை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கி தொடங்கி வைத்து, தெரிவித்ததாவது,

மாண்புமிகு அம்மா அவர்களின் தமிழக அரசு தமிழக மக்களின் அடிப்படை வாழ்வாதரத்திற்கு தேவையான உணவு, உடை, இருப்பிடம் போன்றவற்றிக்கு உத்திரவாதம் அளித்திடும் வகையில் தொலைநோக்கு பார்வையுடன் பல்வேறு, மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

மனித வாழ்விற்கு அடிப்படை தேவைகளில் ஒன்றான உணவிற்கு உத்திரவாதம் அளித்திடும் வகையில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் விலையில்லா அரிசியினையும், உடுத்தும் உடைக்கு உத்தரவாதம் அளித்திடும் வகையில் விலையில்லா வேட்டி, சேலைகளையும், இருப்பிடத்திற்கு உத்தரவாதம் அளித்திடும் வகையில் முதலமைச்சரின் சூரிய ஒளி சக்தியுடன் கூடிய பசுமை வீடு கட்டும் திட்டம், அனைவருக்கும் வீடு கட்டும் திட்டம் போன்ற திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, வருகின்ற 2021-ஆம் ஆண்டு பொங்கல் திருநாளை கொண்டாடும் விதமாக பொது விநியோகத்திட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் முகாம்களில் தங்கியுள்ள இலங்கை தமிழர்கள் பொங்கல் திருநாளை சிறப்பாக கொண்டாடும் பொருட்டு, ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் தலா 2,500 ரூபாய் ரொக்கத்துடன், 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, ஒரு முழு கரும்பு, 20 கிராம் முந்திரி, 20 கிராம் உலர் திராட்சை மற்றும் 5 கிராம் ஏலக்காய் ஒரு துணிப்பையுடன் கூடிய பொங்கல் பரிசுத்தொகுப்பு மற்றும் விலையில்லா வேட்டி, சேலை தமிழகம் முழுவதும் மாண்புமிகு அம்மா அவர்களின் தமிழக அரசு வழங்கிட அறிவித்துள்ளது.

அதன்படி, தமிழகம் முழுவதும் உள்ள இரண்டு கோடியே ஆறு இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.46.43 கோடி மதிப்பில் பச்சரிசி, 95.44 கோடி மதிப்பில் அளவில் சர்க்கரை 61.90 கோடி மதிப்பில் கரும்பு, ரூ.92.86 கோடி மதிப்பீட்டில் முந்திரி, உலர் திராட்சை மற்றும் ஏலக்காய் ஆகியன அடங்கிய தொகுப்பு, ரூ.47.46 கோடி மதிப்பில் துணிப்பை மற்றும் 5158.68 கோடி அளவில் ரூ.2500- ரொக்கத் தொகை ஆக மொத்தம் ரூ.5502.77 கோடி மதிப்பில் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட உள்ளது.

அதனடிப்படையில், தேனி மாவட்டத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் செயல்படும் 401 முழுநேர நியாயவிலைக்கடைகள் 88 பகுதி நேர நியாயவிலைக்கடைகள் மற்றும் 28 மகளிர் நியாயவிலைக்கடைகள் என மொத்தம் 517 நியாயவிலைக் கடைகள் மூலம் 4,08,385 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படவுள்ளது. இதில், பச்சரிசி மற்றும் சர்க்கரை தலா 408 மெட்ரிக் டன் ரூ.2.81 கோடி மதிப்பிலும், முந்திரி மற்றும் உலர் திராட்சை தலா 8168 கிலோ மற்றும் ஏலக்காய் 2042 கிலோ ஆகியன ரூ.1.84 கோடி மதிப்பிலும், 4,08,385 கரும்புகள் ரூ.1.23 கோடி மதிப்பீட்டிலும், துணிப்பை ரூ.0.94 கோடி மதிப்பிலும் மற்றும் ரொக்கம் ஒரு குடும்ப அட்டைக்கு ரூ.2,500/- வீதம் ரூ.102.10 கோடியும் என ஆக மொத்தம் ரூ.108.92 கோடி மதிப்பில் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 21.12.2020 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில் துவக்கி வைத்துள்ளார்கள். அதனைத்தொடர்ந்து, இன்றைய தினம் தேனி மாவட்டத்தில் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. அரிசி குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் 04.01.2021 தேதியில் இருந்து 12.01.2021 தேதி வரை விடுதலின்றி பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படவுள்ளது. அந்ததந்த பகுதியைச் சார்ந்த பொதுமக்களுக்கு சம்பந்தப்பட்ட நியாய விலைக்கடைகள் மூலம் பொங்கல் பரிசுத்தொகுப்பு பெறுவதற்கான நாள், நேரம் ஆகியவற்றுடன் அச்சிடப்பட்டுள்ள அட்டையினை (Token) முன்கூட்டியே வழங்கப்பட்டு வருகிறது. எனவே, குறிப்பிட்ட தேதிகளில் பொங்கல் பரிசுத் தொகுப்பு பெறலாம். மேலும், குறிப்பிட்ட நாட்களில் பெற இயலாதவர்கள் 13.01.2021 அன்றும் சம்பந்தப்பட்ட நியாய விலைக் கடைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID-19) தாக்கத்தினை கட்டுப்படுத்திட அரசால் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு, தற்போது தமிழகம் முழுவதும் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும், தேனி மாவட்டத்தில் அனைத்துத்துறை அரசு அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டதன் மூலம் கொரோனா தொற்று கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

மேலும், கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID-19) கடந்த 9 மாதங்களில் ஏற்பட்ட வருவாய் இழப்பினை ஈடுசெய்திடும் பொருட்டு மாண்புமிகு அம்மா அவர்களின் தமிழக அரசால் அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூபாய் 2,500/- ரொக்கத்துடன் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கப்படுகிறது. எனவே, நியாய விலைக்கடைகளில் பொங்கல் பரிசுத் தொகுப்பினை பெறவருகை தருகின்ற குடும்ப அட்டைதாரர்கள் முககவசம் அணிந்தும், சமூக இடைவெளியை சரிவர கடைபிடித்தும், அரசால் மேற்கொள்ளப்படும் தடுப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு அளித்து, தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை சிறப்பாக கொண்டாட எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மக்களுக்களின் நலனுக்காவே செயல்படுகின்ற அரசாக திகழ்ந்து வரும் மாண்புமிகு அம்மா அவர்களின் தமிழக அரசிற்கு, தொடர்ந்து பொதுமக்கள் தங்களது ஆதரவினை அளித்திட வேண்டும் என தெரிவித்தார்.

இவ்விழாவில், தேனி பாராளுமன்ற உறுப்பினர் ப.ரவீந்திரநாத், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.கே.ஜக்கையன், மாவட்ட ஊராட்சித்தலைவர் க.ப்ரிதா, போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர் சுதாமூர்த்தி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் மொ.ஏகாம்பரம், தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வங்கி துணைத்தலைவர் அ.இளையநம்பி, துணைப்பதிவாளர்கள் ஆர்.மணிகண்டன், எஸ்.எம்.சலீம், ந.முத்துக்குமார், வே.உதயக்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**